


செஞ்சி ஊராட்சி ஒன்றியஅலுவலகத்தில் ரூ 44 லட்சம் மதிப்பீட்டில் 11 ஊராட்சிகளில் தூய்மை பணியை மேற்கொள்வதற்கு19 மின்கலவண்டிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் சிங்கம்பூனரியில் நடைபெற்ற கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை ஆற்றினார். மேடையில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக்கழக பேச்சாளர் சூர்யா வெற்றிகொண்டான்,மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், ஒன்றிய செயலாளர்கள் பூமணி,கே.பாலசுப்பிரமணியன், பேரூர்கழக செயலாளர் தி.கதிர்வேல் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### 150 ஏக்கர் அளவில் அமைந்துள்ள – கீழ்பெண்ணாத்தூர் – அண்டம்பள்ளம் ஏரியில் படகு குழாம்!

# செஞ்சிக்கோட்டையில் ‘ரோப்கார்’ அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – கு.பிச்சாண்டி வலியுறுத்தல்!



சென்னை, ஏப். 2 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கு. பிச்சாண்டி:** எனது கீழ் பெண்ணாத்தூர் தொகுதியிலே அண்டம்பள்ளம் என்ற இடத்திலே 150 ஏக்கர் அளவில் ஓர் ஏரி இருக்கிறது. அதிலே படகு குழாம் அமைக்கப்படுமா? நான் பீகாருக்கு அண்மையில் சென்றிருந்தபோது Rajgir என்ற இடத்திலே கண்ணாடி பாலம் அமைத்து, பல சுற்றுலா பயணிகள் அங்கே அதிகளவில் வரக்கூடிய நிலை இருக்கிறது. அதுபோல, கண்ணாடி பாலம் அமைக்கப்படுமா? அதேபோல் பார்த்தீர்களென்றால், செஞ்சிக் கோட்டைக்கு rope car அமைக்க வேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது.

ஆனால், அமைக்கப்படாமலேயே இருக்கிறது. ஏனென்றால், அரசின் மூலமாக நிதியில்லாத காரணத்தினால் நடைபெறமால் இருக்கிறது.

ஆகவே, அதை தனியார் பங்களிப்பிலே சிங்கப்பூர், மலேசியாவில் இருப்பதை போல, தனியாரும் அரசும் கூட்டாக இணைந்து, rope car அமைக்கின்ற பணியையும், கண்ணாடி பாலம் அமைக்கின்ற பணியையும் மேற்கொள்ள சுற்றுலாத் துறை முன்வருமா?

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்:** பேரவை துணைத் தலைவர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே அண்டம்பள்ளம் பகுதியில், கண்ணாடி பாலம் அமைப்பதற்கும்,

அதேபோல, cable carrope car அமைப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப அந்த பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### 52 ஏக்கரில் 70 கோடி ரூபாய் மதிப்பில்

# உதகையில் ‘சுற்றுச்சூழல் பூங்கா’

## சட்டப்பேரவையில் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 2-

சட்டப்பேரவையில் - கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பொன். ஜெயசீலன்:** என்னுடைய கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள தேவாலா என்ற இடத்தில் மத்திய அரசின் மூலமாக ரூபாய் 70 கோடி செலவில் ஒரு பூங்கா அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டு, தற்போது அங்கு இடம் இல்லை என்கிற காரணத்தினால் அந்தத் திட்டம் உதகைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

70 கோடி ரூபாய் மட்டுமல்ல அதோடு சேர்த்து பொது மற்றும் தனியார் பங்களிப்போடு, மேலும் 115 கோடி ரூபாய் செலவில், அதாவது ஒட்டுமொத்தமாக 185 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டம் செயல்படுத்துவதாக அறிவிக்கப்பட்டு, 2,500 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் எங்கள் ஊர் மக்களெல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

ஆனால், அந்தத் திட்டம் இப்பொழுது உதகைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஏனென்று தெரியவில்லை? அதனை என்னுடைய கூடலூர் சட்டமன்றத் தொகுதியிலே தகுதிவாய்ந்த இடத்தில் நிறைவேற்றி தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** நீலகிரி மாவட்டம், தேவாலாவிலே ஒன்றிய அரசின் மூலம் 70 கோடி ரூபாய்க்கு சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நிச்சயமாக அந்தப் பகுதியிலே அந்த நிதியின் அடிப்படையிலே அமைக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், உதகையிலே 52 ஏக்கரில் 70 கோடி ரூபாய் மதிப்பிலே சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்காக நிதி அமைச்சர், முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அறிவித்திருக்கிறார்கள்.

அதுவும் நிறை வேற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### ஒட்டப்பிடாரம் தொகுதி-

# பண்டாரம்பட்டி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – எம்.சி. சண்முகையா வலியுறுத்தல்!



சென்னை, ஏப்.2-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**எம்.சி. சண்முகையா:** ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், தூத்துக்குடி தாலுகா, மறவன்மடம் ஊராட்சியில் 110 kilovolt துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதற்காக tender கோரப்பட்டுள்ளது. மீண்டும் பண்டாரம்பட்டி கிராமத்தில் குறைந்த மின்னழுத்தம் உள்ளதால், மின்துறை அமைச்சர் புதிய மின்மாற்றி அமைத்துத் தருவாரா?

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** ஒட்டப்பிடாரம் தொகுதியில் இரண்டு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதில் ஒரு துணை மின் நிலையத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு துணை மின் நிலையத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். புதிய மின்மாற்றி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். இந்த வாரம், துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, அங்கே ஆய்வு செய்து, தேவையேற்படின் அது மாற்றி அமைக்கப்படும் உறுப்பினர் அவர்களுக்குத் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### வேலூர் மாவட்ட மாநகர தி.மு.க.

# சைதாப்பேட்டை பகுதி சார்பில் முதல்வர் பிறந்தநாள்விழா பொதுக்கூட்டம்!

வேலூர், ஏப்.2-

வேலூர் மாவட்ட, மாநகர திமுக சைதாப்பேட்டை பகுதி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் தோட்டபாளையத்தில்நடந்தது. கூட்டத்திற்கு பகுதி கழக செயலாளர் எஸ். தயாள்ராஜ் தலைமை தாங்கினார். வட்ட செயலாளர் மாமன்ற உறுப்பினர் வி. எஸ். முருகன் வரவேற்புறை ஆற்றினார்.

பொதுக்குழு உறுப்பினர் சி.சந்திரசேகரன், எஸ். குமார்,எஸ்.சண்முகம், எல். கே. சேதுராமன் சங்கர், அசோக்குமார் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ,மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாநகர துணை செயலாளர் ஏ. ஆர். முன்னாஷெரீப், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

நிகழ்ச்சியில் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் ஜி.ரமேஷ், மாநகர துணை செயலாளர்கள், ஒய்.தேவநேசன், பகுதி செயலாளர்கள்ஆர். பி. இ. சசிகுமார் எம்.ஏ.கணேஷ் சங்கர், ஆர். சத்தியமூர்த்தி,ஜி.பால முரளி கிருஷ்ணா, ,பி.முருகபெருமாள், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கதிரேசன், மா.ப.அன்புநிதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, மாநகர சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் காலப்பாஎன்ற அப்துல் மஜீத், எம். அந்தோணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# தொகுதிகள்தோறும் வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்!

நெல்லை.ஏப்.2-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் வாக்குசாவடி பாகமுகவர்களின் (BLA2)ஆலோசனை கூட்டம் (31.03.25 அன்று) பாளையங்கோட்டை வ.உ.சி மைதானம் அருகில் உள்ள பி.பி.எல். திருமண மண்டபத்தில் மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ். வி.சுரேஷ் தலைமையில் மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர்,பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் பங்கேற்று பேசியதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் இன்று தொகுதி வாரியாக என்னென்ன நலத்திட்டங்கள் தேவை என்பதை அறிந்து ஏராளமான திட்டங்களை வழங்கி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் 234 தொகுதிகளில் 200 தொகுதியில் வெற்றி பெற வேண்டும் என கூறியுள்ளார்கள். தற்போது உள்ள நிலையில் 234 தொகுதிகளிலும் தி.மு.க.வெற்றி பெறும் சூழல் உள்ளது.அனைத்து தொகுதிகளிலும் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேட்பாளராக நிற்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்கள். நம்மிடம் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நேரு அவர்கள் கூறியது போல் நெல்லை மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளையும் நாம் கைப்பற்ற வேண்டும். என்பதை உணர்ந்து நாம் அனைவரும் அயராது உழைத்து ஒற்றுமையாக பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழவில் மாநகராட்சி மேயர். கோ. ராமகிருஷ்ணன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலைராஜா,மாநில நெசவாளரணி செயலாளர் சொ. பெருமாள், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ராஜவர்மன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பேச்சிப்பாண்டியன், பொதுக்குழு உறுப்பி னர்கள் பி.எம்.சரவணன், நடராஜன், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,கிரிஜா குமார்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், துணைச் செயலாளர்கள் பிரபு பாண்டியன்,அப்துல் கையூம்,சுதா மூர்த்தி, பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை,பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) மானூர் ஒன்றிய செயலாளர்கள் மேற்கு அன்பழகன்,கிழக்கு அருள்மணி, தெற்கு கல்லூர் மாரியப்பன்,பேரூர் செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி,அணி நிர்வாகிகள் கருப்பசாமி கோட்டையப்பன்,காமினிதேவன்,

பலராமன்,மகேஸ்வரி, சௌந்தரம் முத்துராஜ், மேரி, அனிதா, பத்மா, மேகலா,ரேவதி அசோக், அலிப் மீரான், சாய்பாபா உள்பட நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர,பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்ட,கிளைக் கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள்,பாக முகவர்கள் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகர திமுக சார்பில் 6072 இஸ்லாமிய ஏழை குடும்பங்களுக்கு ரமலான் பண்டிகையை முன்னிட்டு பிரியாணி செய்ய தேவையான தொகுப்புகளை மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த்,மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ ஆகியோர் வழங்கினார்கள். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்,பகுதி செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தரவிஜி, பாலமுரளி கிருஷ்ணா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





விக்கிரவாண்டி தொகுதி, கெடார் ஊராட்சியில் இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் செ.தினகரன் தலைமையில் கல்பட்டு வி.ராஜா வரவேற்புரையில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் கௌதம. சிகாமணி, அன்னியூர் சிவா , ப.அப்துல்மாலிக் , சூர்யா கிருஷ்ணமூர்த்தி , ரோஜா ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள். ம.ஜெயசந்திரன், டி.என்.முருகன், ஆர்.முருகன், ஆர்.பி..முருகன், க.மும்மூர்த்தி, ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஜெ.ஜெயபால், பி.வி.ஆர்.சு. விசுவநாதன், காடுவெட்டி ஏழுமலை, என்.கலைச்செல்வி, சங்கீதாஅரசி, ஓம்சிவசக்திவேல், சிவக்குமார், அன்பு, பாலாஜி, ராஜவேல், கலைவாணன், பிரேம், தேவேந்திரன், வீரராகவன், பழனி, கருணாகரன், சிவக்குமார் , செல்வம், மதன், செல்வராஜ், புனிதா ஐயனார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




வேலூர் மாநகரம் சைதாப்பேட்டை பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் எஸ்.தயாள்ராஜ் தலைமையில் தோட்டபாளையத்தில் நடந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் பொதுக் கூட்டத்தில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, தலைமைக் கழக பேச்சாளர் உத்திராபதி, பொதுக்குழு உறுப்பினர் எஸ். கதிரேசன், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், கொள்கை பரப்பு துணை செயலாளர் ரமேஷ், மாமன்ற உறுப்பினர் வி.எஸ்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.